# ஆசியப் பிரதேசம்

புவியியல்

ஆசிரியர்: ஏ.கஜன் B.A Tamil (R)
077 2400 707 / 076 8044 959

## பகுதி I அலகுப் பரீட்சை

## தரம்: 09

நேரம்: ஒரு மணித்தியாலம்
Time: One hour

புள்ளிகள்
Marks

மாணவர் பெயர்: ............................................................

* இவ் வினாத்தாளில் 60 **வினாக்கள்** உள்ளடக்கப்பட்டுள்ளன.
* **எல்லா** வினாக்களுக்கும் **இத் தாளிலேயே** விடை எழுதுக.
* **சரியான** விடையெழுதப்பட்ட **ஒரு** வினாவிற்கு 1 **புள்ளி** வழங்கப்படும். இவ் வினாத்தாளுக்குரிய **மொத்தப் புள்ளிகள்** 100 ஆகும்.
* **தெளிவற்ற விடைத் தெரிவுகளுக்குப் புள்ளிகள் வழங்கப்படமாட்டாது.**

- **பின்வரும் வினாக்களுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

**1.** ஆசியாக் கண்டத்துடன் தொடர்புற்றுள்ள கண்டம்.
1. ஆபிரிக்கா 2. தென்னமெரிக்கா 3. ஐரோப்பா 4. அவுஸ்ரேலியா

**2.** பின்வருவனவற்றுள் **பிழையான** கூற்று.
1. ஆசியாவின் வடக்கில் ஆர்ட்டிக் சமுத்திரம் அமைந்துள்ளது.
2. ஆசியாவின் கிழக்கில் பசுபிக் சமுத்திரம் அமைந்துள்ளது.
3. ஆசியாவின் மேற்கில் ஆபிரிக்காகக் கண்டம் அமைந்துள்ளது.
4. ஆசியாவின் தெற்கில் இந்து சமுத்திரம் அமைந்துள்ளது.

**3.** ஐரோப்பாவும், ஆசியாவும் இணைந்த நிலத்திணிவு **பெயர்பெறுவது.**
1. பஞ்சியா 2. ஸ்கண்டிநேவியா 3. யுரேசியா 4. லொறேசியா

**4.** ஆசியாக் கண்டத்தையும் ஐரோப்பாக் கண்டத்தையும் **வேறுபடுத்தும்** மலைத்தொடர்.
1. யூரல் மலை 2. அல்ப்ஸ் மலை 3. இமயமலை 4. அந்தீஸ் மலை

**5.** பின்வருவனவற்றுள் ஆசியாக் கண்டத்திற்கு உரித்தான தீவுகளில் சிறிய தீவாக **அமைவது.**
1. நிக்கோபார் தீவு 2. இலங்கைத்தீவு 3. தாய்வான் 4. இந்தோனேசியத் தீவு

**6.** ஆசியாக் கண்டத்தின் தனி அமைவிடம் தொடர்பான **சரியான கூற்று.**
1. தென் அகலக்கோடு $10^{\circ}$ – வட அகலக்கோடு $80^{\circ}$ மற்றும் கிழக்கு நெடுங்கோடு $25^{\circ} – 180^{\circ}$ வரை.
2. தென் அகலக்கோடு $25^{\circ}$ – வட அகலக்கோடு $180^{\circ}$ மற்றும் கிழக்கு நெடுங்கோடு $10^{\circ} – 80^{\circ}$ வரை.
3. தென் அகலக்கோடு $10^{\circ}$ – வட அகலக்கோடு $40^{\circ}$ மற்றும் கிழக்கு நெடுங்கோடு $25^{\circ} – 160^{\circ}$ வரை.
4. தென் அகலக்கோடு $10^{\circ}$ – வட அகலக்கோடு $60^{\circ}$ மற்றும் கிழக்கு நெடுங்கோடு $25^{\circ} – 180^{\circ}$ வரை.

**7.** உலகின் **மிகப் பெரிய** கண்டமாக விளங்குவது.
1. ஆபிரிக்கா 2. தென்னமெரிக்கா 3. ஆசியா 4. அவுஸ்ரேலியா

**8.** உலகின் மிக உயரமான மலைத்தொடராகக் **கொள்ளப்படுவது.**
1. இமயமலை 2. அல்ப்ஸ் மலை 3. றொக்கிமலை 4. அந்தீஸ் மலை

**9.** உலகில் **அதிகமான** மழைவீழ்ச்சியைப் பெறும் இடம்.
1. சீராப்பூஞ்சி 2. மேகாலயா 3. இக்விக் 4. மாலிபொட

**10.** மொத்த சனத்தொகையில் ஏறத்தாழ 60% ஆன மக்கள் வாழும் **கண்டம்.**
1. ஆபிரிக்கா 2. தென்னமெரிக்கா 3. ஆசியா 4. அவுஸ்ரேலியா

**11.** உலகில் அதிக சனத்தொகையைப் பகிர்ந்துகொள்ளும் **இரண்டு** நாடுகளாவன.
1. இந்தியா, சீனா 2. ஜப்பான், சீனா
3. பாக்கிஸ்தான், இந்தியா 4. பாக்கிஸ்தான், சீனா

12. உலகில் வழக்கிலுள்ள மொழிகள் தொடர்பான தகவல்களை வெளியிடுபவர்கள்.
1. யுனெஸ்கோ 2. யுனிசெவ் 3. அசுத்ரோ 4. எத்னோலோக்

13. ஆசியாவின் சராசரி சனத்தொகை அடர்த்தி **(சதுர கிலோ மீற்றருக்கு – பேர்கள்).**
1. 3000 2. 37 3. 87 4. 130

14. ஆசியாக் கண்டத்துடன் தொடர்புடைய புராதன நாகரிகம் **அல்லாதது.**
1. மொசப்பத்தேமியா 2. குவாங்கோ 3. எகிப்து 4. சிந்துவெளி

15. ஆசியாக் கண்டத்தில் அமைவுபெற்றுள்ள சுதந்திர அரசுகள் / நாடுகளின் **எண்ணிக்கை.**
1. 59 2. 37 3. 54 4. 130

16. ஆசியாவின் மிக விசேடமான இடவிளக்கவியல் நிலத்தோற்றம்.
1. இமயமலை 2. எவரெஸ்ட் 3. சிந்துவெளி 4. பமீர் முடிச்சு

17. இந்தியா உபகண்டமாகக் கொள்ளப்படுவதற்குக் காரணமான மலைத்தொடர்.
1. யூரல் மலை 2. அல்ப்ஸ் மலை 3. றொக்கிமலை 4. இமயமலை

18. இமயமலைத் தொடரில் அமையப்பெற்றுள்ள மிகவும் **உயரமான** மலைச் சிகரம்.
1. எவரெஸ்ட் 2. கன்சன்யுங்கா 3. மகாலு 4. தவளகிரி

19. உலகின் மிக உயரமானதும், ஆசியாக் கண்டத்திற்கு உரித்தானதுமான **மேட்டுநிலம்.**
1. தக்கணம் 2. பமீர் 3. திபெத் 4. மத்திய சைபீரியா

20. பின்வருவனவற்றுள் ஆசியாவின் பரந்த சமவெளிப் பகுதியாகக் **கொள்ள முடியாதது.**
1. மேற்கு சைபீரியா 2. இந்து – கங்கை 3. மஞ்சூரியா 4. நுளபார்

21. **"உலகின் முகடு" (Roof top of the world)** என வர்ணிக்கப்படும் மேட்டுநிலம்.
1. தக்லன்மக்லன் 2. பமீர் 3. திபெத் 4. மத்திய சைபீரியா

22. **"மஞ்சள் நதி"** எனப் பெயர்பெறும் சீன நதி.
1. நைல் 2. குவாங்கோ 3. இந்து 4. கங்கை

23. யூப்பிரட்டீஸ் **மற்றும்** தைக்கிறீஸ் நதிகள் கடலுடன் சங்கமிக்கும் பகுதி.
1. அரபிக் கடல் 2. சார்க்கடல் 3. பாரசீகக் குடா 4. இந்து சமுத்திரம்

24. பசுபிக் சமுத்திரத்தில் கலக்கும் ஆசிய நதி **அல்லாதது.**
1. அமுர் 2. குவாங்கோ 3. லீனா 4. யாங்சி

25. ஆசியாவில் உள்ள மிக நீளமான **முதல் நான்கு** நதிகளையும் **ஏறுவரிசை**யில் தரும் விடை.
1. லீனா, மீகொங், குவாங்கோ, யாங்சி 2. லீனா, யெனிசி, ஓப், இந்து
3. யெனிசி, மீகொங், குவாங்கோ, யாங்சி 4. யாங்சி, குவாங்கோ, மீகொங், லீனா

26. உலகின் **மிக ஆழமான** நன்னீர் ஏரியாக விளங்குவது.
1. தித்திக்கா 2. பொல்காஸ் 3. பைக்கால் 4. பூப்பூ

27. வடவரைக் கோளத்தில் மத்திய கோட்டிற்கும், கடகக் கோட்டிற்கும் இடையில் அமைவுபெற்றுள்ள காலநிலை வலயம்.
1. இடைவெப்ப வலயம் 2. அயன வலயம் 3. குளிர் வலயம் 4. சவன்னா வலயம்

28. இந்தியா, இலங்கை, மியன்மார் உள்ளிட்ட நாடுகளில் நிலவும் காலநிலை வகை.
1. அயனமழைக் காலநிலை 2. அயனப் பருவக்காற்றுக் காலநிலை
3. வெப்பப் பாலைவனக் காலநிலை 4. அயன சவன்னாக் காலநிலை

A.Kajan - A.Kajan

**29.** மத்திய தரைக் கடலைச் சூழ்ந்துள்ள பிரதேசங்களில் நிலவும் காலநிலை.
1. இளஞ்சூடான இடைவெப்பக் காலநிலை
2. மலைக் காலநிலை
3. முனைவு மற்றும் துந்திராக் காலநிலை
4. அயன சவன்னாக் காலநிலை

**30.** இயற்கைத் தாவரங்களின் வளர்ச்சியில் செல்வாக்குச் செலுத்தும் **பிரதான** பௌதிகக் காரணிகளாவன.
1. வெப்பம், மழை 2. பனி, வெப்பம் 3. வெப்பம், அமுக்கம் 4. மழை, காற்று

**31.** மஹோகனி, கருங்காலி, சந்தனம், ரோஸ்வுட் முதலான தாவர இனங்களை **அவதானிக்கவல்ல** காட்டு வகை.
1. இடைவெப்ப இலையுதிர்க் காடு 2. ஊசியிலைக் காடு
3. தைக்காக் காடு 4. அயனமழைக் காடு

**32.** உயர்ந்தளவான உயிர்ப்பல்வகைமைத் தன்மையைக் காண்பிக்கும் **காட்டு வகை.**
1. இலையுதிர்க் காடு 2. அயனமழைக் காடு 3. ஊசியிலைக் காடு 4. தைக்காக் காடு

**33.** இடைவெப்ப இலையுதிர் காடுகளில் அவதானிக்க **முடியாத** தாவர இனங்களாவன.
1. ஒக், மல்பெரி 2. யுக்கலிப்டஸ், பைன் 3. ஏபோனி, ஏகேஸியா 4. பைன், செஸ்நட்

**34.** **துந்திரா / தண்டிராக்** காலநிலைக்குரித்தான காட்டு வகையாகக் **கொள்ளப்படுவது.**
1. இடைவெப்ப இலையுதிர்க் காடு
2. மொந்தானாக் காடு
3. இலையுதிர்க் காடு
4. ஊசியிலைக் காடு

**35.** ஊசியிலைக் காட்டுக்கு உரித்தான விசேட விலங்கினங்களைச் **சரியாக** இனங்காட்டும் விடைத் தொகுதி.
1. பனிக்கரடி, என்டிலொப் 2. மின்க், ஓநாய் 3. சீபல், பனிநாய் 4. மரை, மான்

**36.** மொகஞ்சதாரோ, ஹரப்பா ஆகிய புராதன நதிக்கரை நாகரிகங்களோடு **தொடர்புபடும்** நதிப் பள்ளத்தாக்கு.
1. இந்துநதி 2. அமேசன் நதி 3. குவாங்கோ நதி 4. நைல் நதி

**37.** குவாங்கோ நதிப் பள்ளத்தாக்கில், எந்த நகரை அடிப்படையாகக் கொண்டு நதிக்கரை நாகரிகம் ஒன்று தோற்றுவிக்கப்பட்டது?
1. மொசப்பத்தேமியா 2. அன்யான் 3. மஞ்சூரியா 4. யுவான்

**38.** யூப்பிரட்டீஸ், தைக்கிரீஸ் ஆகிய நதிகளுக்கிடையில் அமைவுபெற்றுள்ள நாகரிகமாக **அமைவது.**
1. மொசப்பத்தேமிய நதிக்கரை நாகரிகம்
2. நைல்நதி நாகரிகம்
3. குவாங்கோ நதிக்கரை நாகரிகம்
4. சிந்துவெளி நாகரிகம்

**39.** ஆசியாவின் மொத்த சனத்தொகையாகக் கொள்ளப்படுவது **(பில்லியன்களில்).**
1. **4460** 2. **44.6** 3. **4.46** 4. **446**

**40.** **"மொங்கலோய்ட்"** இனத்தவர்களை அவதானிக்கவல்ல நாடுகளின் தொகுதி.
1. இந்தியா, ஆப்கானிஸ்தான், இலங்கை
2. சீனா, ஜப்பான், ஆப்பானிஸ்தான்
3. இலங்கை, இந்தியா, மலேசியா
4. சீனா, ஜப்பான், சிங்கப்பூர்

**41.** பின்வருவனவற்றுள் ஆசியாவில் சனத்தொகை **குறைவான** பகுதியாக **அமையாதது.**
1. மொங்கோலியா 2. டோக்கியோ 3. வட சமவெளி 4. கோபிப் பாலைவனம்

A.Kajan - A.Kajan

**42.** 2017 இல் ஆசியாவில் அதிக சனத்தொகைச் செறிவுகொண்ட முதல் **ஐந்து** நாடுகளையும் **இறங்குவரிசை**யில் தரும் விடைத் தொகுதி.
1. இந்தியா, சீனா, இந்தோனேசியா, பாக்கிஸ்தான், பங்களாதேஸ்
2. சீனா, இந்தியா, இந்தோனேசியா, பாக்கிஸ்தான், பங்களாதேஸ்
3. பங்களாதேஸ், பாக்கிஸ்தான், இந்தோனேசியா, இந்தியா, சீனா
4. துருக்கி, ஈரான், வியட்நாம், பிலிப்பைன்ஸ், ஜப்பான்

**43.** 2017 இல் ஆசியாவில் குறைந்த சனத்தொகையைக் கொண்ட முதல் **ஐந்து** நாடுகளையும் **ஏறுவரிசை**யில் தரும் விடைத் தொகுதி.
1. இந்தியா, சீனா, இந்தோனேசியா, பாக்கிஸ்தான், பங்களாதேஸ்
2. மாலைதீவுகள், புறூணை, மெகாவோ, பூட்டான், திமோர்
3. ஜோர்ஜியா, மொங்கோலியா, ஆர்மோனியா, கட்டார், பஹ்ரைன்
4. திமோர், பூட்டான், மெகாவோ, புறூணை, மாலைதீவுகள்

**44.** உலகின் பாரிய மோட்டார் வாகனத் தயாரிப்பாளர்களின் தர வரிசையில் **6ஆவது** இடத்தைப் பிடித்துள்ள நாடு.
1. ஐக்கிய அமெரிக்கா 2. தாய்வான் 3. ஜப்பான் 4. கொரியா

**45.** உலகில் அணுமின் சக்தியை **அதிகளவில்** உபயோகப்படுத்திவரும் நாடுகளில் முன்னணி பெற்றுத் திகழ்வது.
1. சீனா 2. பாக்கிஸ்தான் 3. ஜப்பான் 4. அமெரிக்கா

**46.** பாக்கிஸ்தானின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் **விவசாயத்துறை**யின் பங்களிப்பு.
1. 25% 2. 43% 3. 25.9% 4. 27.5%

**47.** **ஜேபில் அலி (Port Jebil Ali)** துறைமுகம் அமையப்பெற்றுள்ள நாடு.
1. சீனா 2. தென்கொரியா 3. டுபாய் 4. தாய்வான்

**48.** பதப்படுத்தாத பருத் தியை உலக சந்தைக்கு வழங்கும் **பிரதான** ஆசிய நாடு.
1. இலங்கை 2. பாக்கிஸ்தான் 3. ஜப்பான் 4. டுபாய்

**49.** **காரிப் (Khariff)** விவசாய பருவத்தில் பாக்கிஸ்தானில் பயிரிடப்படும் பயிர்வகை **அல்லாதது.**
1. பருத்தி 2. ஓட்ஸ் 3. கரும்பு 4. தினை

**50.** முழுமையாக மூலப்பொருட்கள் மற்றும் கனிய வளங்களை இறக்குமதி செய்து முடிவுப் பொருட்களை ஏற்றுமதி செய்யும் சிறப்பம்சம் பொருந்திய கிழக்காசிய நாடு.
1. சீனா 2. தென்கொரியா 3. ஜப்பான் 4. தாய்வான்

**51.** **காரிப் (Khariff)** மற்றும் **ராபி (Rabi)** ஆகிய இரு விவசாய பருவங்களிலும் பாக்கிஸ்தானில் பயிரிடப்படும் பயிர்வகையாக **அமைவது** .
1. பருத்தி 2. நெல் 3. சோளம் 4. தினை

**52.** மொத்த தேசிய உற்பத்தியின் அடிப்படையில் **மூன்றாவது** மிகப்பெரிய பொருளாதாரத்தைக் கொண்டமைந்துள்ள நாடு.
1. சீனா 2. கொரியா 3. ஜப்பான் 4. டுபாய்

**53.** ஜப்பானின் **பிரதான** கைத்தொழிற் துறையாகக் **கொள்ளப்படுவது.**
1. கப்பல் கட்டும் கைத்தொழில்
2. மோட்டார் வாகனத் தயாரிப்பு
3. விமானம் கட்டும் கைத்தொழில்
4. ஆயுத உற்பத்தி

**54.** ஜப்பானுக்கு உரித்தான உலகின் முன்னணி மோட்டார் வாகனத் தயாரிப்பு நிறுவனம் **அல்லாதது.**
1. ஹவசாகி 2. ஹொண்டா 3. யமஹா 4. சோனி

**55.** ஷாப், நெக், பெசோனிக் இலக்டிரிக் முதலான ஜப்பானிய நிறுவனங்களுடன் **தொடர்புபடும்** கைத்தொழிற்துறை
1. கப்பல் கட்டும் கைத்தொழில்
2. இலத்திரனியல் மின்னியல் உற்பத்தி
3. விமானம் கட்டும் கைத்தொழில்
4. மோட்டார் வாகனத் தயாரிப்பு

**56.** உலகின் மிகப்பெரிய வர்த்தக மையமான **டுபாய் மால் (Dubai Mall)** அமையப் பெற்றிருப்பது.
1. கட்டார் 2. சவுதிஅரேபியா 3. டோகா 4. டுபாய்

**57.** சிகோ எப்சன், ஐ.பி.எம், புஜிட்சு முதலான நிறுவனங்கள் எவ்வகை உற்பத்திக் கைத்தொழிலுடன் தொடர்புறுகின்றன?
1. கப்பல் கட்டும் கைத்தொழில்
2. இலத்திரனியல் மின்னியல் உற்பத்தி
3. கணனி மற்றும் கணனி உபகரணத் தயாரிப்பு
4. மோட்டார் வாகனத் தயாரிப்பு

**58.** ஐக்கிய அரபு எமிரேட்டில் உள்ளடங்கும் மாநிலங்களின் எண்ணிக்கை.
1. 03 2. 06 3. 07 4. 09

**59.** டுபாயின் பொருளாதாரத்தில் **அதிகளவிலான** வருவாய் ஈட்டப்படுவது.
1. விவசாயத்துறை மூலம்
2. கைத்தொழிற்துறை மூலம்
3. சேவைத்துறை மூலம்
4. முதனிலை பொருளாதாரம் மூலம்

**60.** உலகில் கிழக்கையும் மேற்கையும் இணைக்கும் நவீன குறுக்குப் பாதைகளின் விமான சேவை மையமாக **விளங்குவது.**
1. கட்டார் 2. சவுதி அரேபியா 3. டோகா 4. டுபாய்

A.Kajan - - A.Kajan